**செய்தி வெளியீடு எண்: 550** **நாள்: 28.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

IAS/IPS போன்ற அகில இந்திய குடிமைப் பணிகளில் சேர மத்திய தேர்வாணைக் குழு முதல் நிலைத் தேர்வுகளை (Preliminary Examination ) 31.05.2020 –ல் நடத்தவுள்ளது.

இத்தேர்வுகளில் வெற்றி ஈட்ட, தமிழ் நாட்டை சேர்ந்த பட்டதாரி/முதுநிலை பட்டதாரிகட்கு தமிழக அரசு, கட்டணம் ஏதுமின்றி, ஆறுமாத கால உண்டு உறைவிடப் பயிற்சியை அளிக்கிறது. இப்பயிற்சி சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள 'அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில்' அளிக்கப்படும்.

ஆர்வமும், தகுதியும் உள்ள தமிழக இளைஞர்கள் இப்பயிற்சினைப் பெற்று, வெற்றி பெற நான் அன்போடு அழைக்கிறேன். இப்பயிற்சிக்கான நுழைவுத் தேர்வு 13.10.2019 அன்று தமிழகத்தில் 20 மையங்களில் நடைபெறும்.

இணையதள வழி விண்ணப்பிக்க கடைசி நாள் 16.09.2019 (பிற்பகல் 6 மணி) ஆகும். கூடுதல் தகவல்களை www.civilservicecoaching.com –என்ற இணையதள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**